O.S. No: 136/2019

**பெயர் :கலைமணி**

**வா.சா.1**

03-10-2024

**குறுக்கு விசாரணை**

நான் பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். பிரதிவாதி சாந்தியை 10 ஆண்டுகளாக தெரியும். சாந்தியின் கணவர் ஜீவானந்தத்தை 10 ஆண்டுகளாக தெரியும். நான் விவசாயம் மற்றும் ஜோதிட தொழில் செய்கிறேன். சாந்தி தாக்கல் செய்த எதிர் வழக்குரை விவரங்கள் தெரியும் . தாவா சொத்தின் அளவுகள் விஸ்தீர்ணம் தெரியும் 25.1/2 குழி. கும்பகோணம் மாவட்ட முதன்மை உரிமையியல் நீதிமன்றத்தில் சாந்தி இந்த அசல் வழக்கு எண் 48/2021 வழக்கின் வாதி மீது தாக்கல் செய்த பிராது, எதிர் வழக்குரை மற்றும் பிராதின் வரைபடம் இது தான் என்றால் ஆமாம் . சாந்தியின் வீடு தாவா சொத்தில் தான் உள்ளதா என்றால் ஆமாம். அந்த வீட்டின் வீட்டு வரி ரசீது சாந்தியின் பெயரில் தான் உள்ளது என்றால் ஆமாம் . சொத்திற்கு மேற்கே பாதை என்றால் ஆமாம் . அது வயலுக்கு போகும் பாதை அவர்களுடையது அல்ல . சாந்தியின் சொத்திற்கு தென்புறத்தில் எங்கள் குடும்பத்திற்கு சொந்தமான 5 ஏக்கர் சொத்து உள்ளது. அந்த சொத்திற்கு மேற்கே உள்ள 10 அடி வழியை தவிர வேறு பாதை உள்ளதா என்றால் உள்ளது. அந்த பாதை கிரையம் வாங்குவதற்கு சாந்தியின் கணவர் தான் உதவி செய்தாரா என்றால் இல்லை. ஏற்கனவே சாந்தி எங்கள் மீது வழக்கு போட்டார் என்றால் நாங்கள் வழக்கு போட்ட பிறகு அவர் வழக்கு போட்டார். அவ்வாறு வழக்கு போடுவதற்கான பிரச்சினை சாந்தியால் தான் ஏற்பட்டது . நாங்கள் அக்ரிமெண்ட் போட்டபடி கிரயம் செய்து கொடுக்க அவர் முன் வராததால் நீதிமன்றத்திற்கு வந்துவிட்டோம். 27/08/2019 இல் தாவா சொத்தின் வேலியில் உள்ள மரங்களை நாங்கள் அப்புறப்படுத்த முயற்சி செய்தோம் என்றால் இல்லை . அதனால் சாந்தி போட்ட நிரந்தர உறுத்துக்கட்டளை வழக்கில் ஆட்சேபனை ஏதும் இல்லை என்றால் சரியல்ல.

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,

Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.